## கலைஞர் கனவு இல்லத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட ரூ.1400 கோடி கூடுதல் நிதி

# ரூ.19,287.44 கோடி அளவிற்கு இறுதி துணை மதிப்பீடுகள்!

### பேரவையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்து பேச்சு!

**சென்னை, மார்ச் 22 -**

**தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள், 2024-25 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றிய உரை வருமாறு:**

2024-2025 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கையினை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன். இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 19,287.44 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கின்றன. இதில், 12,639.36 கோடி ரூபாய் வருவாய் கணக்கிலும், 6,429.20 கோடி ரூபாய் மூலதனக் கணக்கிலும், 218.88 கோடி ரூபாய் கடன் கணக்கிலும் அடங்கும்.



2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9 ஆம் நாளன்று 2024-2025 ஆம் ஆண்டிற்கான

முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் செய்யப்பட்ட பின்னர், “புதுப்பணிகள்” தாக்கல் மற்றும் “புது துணைப்பணிகள்” குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவது இத்துணை மதிப்பீடுகளின் முக்கிய நோக்கமாகும்.

துணை மதிப்பீடுகளில் கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் சில முக்கிய இனங்கள் பின்வருமாறு:

- மானியக் கோரிக்கை எண்.13, “உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)”, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிதி நிலைத்தன்மையை உயர்த்துவதற்கும், உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், பங்கு மூலதன உதவியாக 2,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்..42 “ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை”, ‘கலைஞரின் கனவு இல்லம்’ திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்காக 1,400 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்.14 “எரிசக்தித் துறை”, மின் நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைக்காக 1,036 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்.48 “போக்குவரத்துத் துறை”, பேருந்துகள் வாங்குவதற்காக மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதலாக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மானியக் கோரிக்கை எண்.51 “இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு”,

2024ஆம் ஆண்டில் வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவமழைக் காலங்களில் பெய்த கனமழை மற்றும் ஃபெஞ்சல் புயல் பாதிப்புகளின் துயர் தணிப்புப் பணிகளுக்காக 90184 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2024 - 2025 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு துணை மதிப்பீட்டை தாக்கல் செய்து பேசினார்.

## வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!




## மின் உற்பத்தியைப் பெருக்க

# தமிழ்நாடு அரசு மிகத் தீவிர நடவடிக்கை!

### ‘தினத்தந்தி’ ஏடு பாராட்டு!

சென்னை, மார்ச் 22-

தமிழ்நாட்டின் மின் ஆலைகளெல்லாம்மின்உற்பத்தியை முழு வீச்சில் தொடங்கியிருப்பதால் மின்சாரத் தட்டுப்பாடு வராது. மின் உற்பத்தியை பெருக்க தமிழ்நாடு அரசு மிகத் தீவிரநடவடிக்கைஎடுத்துள்ளது என ‘தினத்தந்தி’ ஏடு 21.03.2025தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:

ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கு வித்தாக இருப்பது மின்சார உற்பத்திதான். ஒருபக்கம் அனைத்துவீடுகளிலும்மின்சாரம் என்பதை இலக்காகக் கொண்டு மத்தியமாநில அரசுகள் செயல்பட்டு வருகின்றன. தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரமேஅடிப்படைதேவையாகும். தொழில் தொடங்க முன்வரும் நிறுவனங்களின் முதல் கேள்வியேதடையில்லாதமின்சாரம் உங்கள் மாநிலத்தில் கிடைக்குமா?என்பதுதான். இந்தகேள்விக்கு சாதகமான பதில் கிடைப்பதால்தான் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் அமைக்க தேடிவருகிறார்கள். தமிழ்நாடுஅரசும்மின்சார உற்பத்தியைப் பெருக்க மிக தீவிரமாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

உலக நாடுகளும் பசுமை எரிசக்தியில்அதிகஅக்கறைகாட்டிவருகிறது. அதாவது, அனல் மின்சார நிலையங்களை தொடங்கினால் நிலக்கரி தட்டுப்பாடு

ஒருபக்கம்இருந்தாலும், சுற்றுச்சூழல் மாசினாலும் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. நிலக்க ரிக்காகவும் வெளிமாநிலங்களையும், வெளிநாடுகளையும் சார்ந்து இருக்கவேண்டிய நிலையும் இருக்கிறது. ஆனால் பசுமைஎரிசக்தி அதாவது சூரிய வெப்பத்தினால் மின்சார உற்பத்தி மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தி யினால் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு இல்லை, இயற்கையின் அருட்கொடையால் அதிக செலவில்லாமல் மின்சார உற்பத்தியும் செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில்நல்லவேளையாககாற்றுக்கும்பஞ்சமில்லை, சூரிய வெப்பத்துக்கும் பஞ்சமில்லை. பருவ காலங்களில் காற்று அதிகமாக வீசுகிறது. சூரியவெப்பமும்வெயில்காலங்களில் மட்டுமல்லாமல்

ஆண்டுக்கு 300 நாட்களுக்குமேல்தாராளமாககிடைக்கிறது. இதை பயன்படுத்தி தமிழக அரசு தனியாரை ஊக்குவித்துமானியம்மற்றும்சலுகைகளை அளித்து சூரிய வெப்பத்தின்மூலம்மின்சாரம்உற்பத்தி செய்யும் நிலையங்களை தொடங்கிவருகிறது. அந்தவகையில், சமீபத்தில் நெல்லை


தலையங்கம்
தினத்தந்தி
21.3.2025 (வெள்ளிக்கிழமை)
தமிழ்நாட்டில் மின்சார தட்டுப்பாடு வராது!
காற்றாலை மின்சாரம்
இனி தங்குதடையின்றி மின்சாரம் கிடைக்கும்!
சூரிய ஒளி மின்சக்தி

மாவட்டம்கங்கைகொண்டான் சிப்காட் பூங்காவில் உலக புகழ் பெற்றஇந்தியகுழுமமானடாடா குழுமத்தின் துணை நிறுவனமான டாடா பவர் நிறுவனம் ரூ.3,800 கோடி முதலீட்டில் 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் 4 ஆயிரத்து 300மெகாவாட்மின்சாரத்தை சூரிய வெப்பம் மூலம் உற்பத்தி செய்யும் ஆலையை அமைத்துள்ளது.

இந்த ஆலையை முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின்திறந்துவைத்தார். இந்த ஆலையில் பணிபுரிபவர்களில்80சதவீதம் பேர் பெண்கள். இந்த ஆலையைசுற்றி100கிலோமீட்டர்சுற்றளவில்வசிக்கும்பெண்கள் இந்த ஆலையில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இப்போது 4,300 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் இந்த ஆலையில் எதிர்காலத்தில் 8 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவுக்கு விரிவாக்கம் செய்யப்படும் என்று டாடா நிறுவன தலைவர் என்.சந்திரசேகரன் தெரிவித்தார். இந்தியாவிலேயே ஒரே இடத்தில் இவ்வளவு அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்த ஆலைக்காக 4.7, 2022ல் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, 20.10.2022 ல் அடிக்கல் நாட்டப்பட்டு 2 ஆண்டுகளில் திறந்தும்

வைக்கப்பட்டுள்ளதுமிகவும் சிறப்புக்குரியதாகும். இந்த ஆலை மட்டுமல்லாமல் அதே கங்கைகொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் ரூ.2,574 கோடிசெலவில்2,500பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையிலான3ஆயிரம்மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் ஆலைக்காகவும் மு.க. ஸ்டாலின்அடிக்கல்நாட்டினார். இந்த ஆலைகளெல்லாம் மின்சார உற்பத்தியை முழுவீச்சில் தொடங்கியபிறகுதமிழ்நாட்டில் மின்சார தட்டுப்பாடும் வராது, முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் சொன்னதுபோல தென்மாவட்டங்களில்தொழில் வளர்ச்சிபுலிப்பாய்ச்சலாகஇருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பா.ஜ.க.வின் அடியாளாகச் செயல்படும் அமலாக்கத் துறையால்

# ‘திராவிட மாடல்’ அரசை துரும்பளவும் அசைக்க முடியாது!

### சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

**சென்னை, மார்ச் 22 -**

**ஆள் பிடிக்கும் பார்முலா தமிழ்நாட்டில் எடுபடாது. முதுகெலும்பில்லாத கோழைகள் பாஜகவிற்கு அடிபணியலாம் ஒருகாலமும் திராவிட மாடல் அரசைத் துரும்பளவு கூட அசைத்துப் பார்க்க முடியாது என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கையில் குறிப்பிட்டு ள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

அமலாக்கத் துறையின் மிரட்டல் உருட்டல்களுக்கெல்லாம் தமிழ்நாடு அஞ்சாது, என்பதை அறியாத ஆதிக்கவாதிகளின் அராஜக நடவடிக்கைக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் அமலாக்கத்துறைக்குக் குட்டு வைத்திருக்கிறது உயர் நீதிமன்றம்.

அமைச்சர் செந்தில் பாலாஜி மீதான வழக்கிலேயே உச்ச நீதிமன்றத்தால் கடும் கண்டனத்தை எதிர்கொண்ட அமலாக்கத்துறை தற்போது மீண்டும் சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாகியிருக்கிறது.

தமிழ்நாட்டின் போர்க்குணத்தை அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் எதிர்கொள்ளத் திராணி இல்லாத பாஜக, தனது அச்சுறுத்தல் ஆயுதத்தை அமலாக்கத் துறை மூலம் நீட்டியது. பாஜகவின் ஆணவத்திற்கான அடிதான் உயர்நீதிமன்றம் இப்போது எழுப்பிய கேள்விகள்.

“இரவில் சோதனை நடக்கவில்லை; அனைவரும் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர்; அரசு ஊழியர்கள் யாரையும் நாங்கள் சிறைபிடிக்க வில்லை; யாரையும் துன்புறுத்தவில்லை” என்றெல்லாம் உயர் நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை சொன்ன போது, “பொய் சொல்ல வேண்டாம். அனைத்தும் செய்தித்தாள்களில் வெளியாகியுள்ளது” என நீதிமன்றம் கண்டித்திருக்கிறது. ‘டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக மார்ச் 25ஆம் தேதி வரை எந்த மேல் நடவடிக்கையும் எடுக்க கூடாது’ என அமலாக்கத் துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

★ எந்த அதிகாரி தவறு செய்துள்ளார் எனத் தெரியாமல் எப்படி அனைத்து அதிகாரிகளையும் நீங்கள் எப்படித் தடுத்து வைக்க முடியும்?

★ அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இருந்தாலும், அதைச் செயல்படுத்திய விதம் தவறு.

★ அமலாக்கத்துறை சோதனை நடத்தக் காரணமான வழக்குகள், விவரங்களைப் பதில் மனுவில் தெரிவிக்க வேண்டும்.

★ இரவு வரை பெண் அதிகாரியை சிறைபிடித்து சோதனை நடவடிக்கை எடுப்பது அச்சுறுத்தல்.

என்றெல்லாம் கேள்விகளை எழுப்பியிருக்கிறது உயர் நீதிமன்றம்.

எதிர்க் கட்சிகளை மிரட்டுவதற்காக அமலாக்கத் துறை, வருமானவரித் துறை, சி.பி.ஐ, தேர்தல் ஆணையம் போன்ற அதிகார அமைப்புகளைத் தனது கைப்பாவையாக ஒன்றிய பாஜக அரசு பயன்படுத்தி வருகிறது. பாஜக ஆளாத மாநிலங்களில் முகாந்திரமற்ற குற்ற ச்சாட்டுகளை முன்வைத்து, அமலாக்கத் துறை பல்வேறு வழக்குகளைப் புனைந்து, எதிர்க்கட்சிகளை முடக்குவதையே தனது முழுநேரப் பணியாகக் கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர்களையும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த முதல்வர்களையும் கைது செய்து, ஜனநாயகத்திற்கு எதிரான சர்வாதிகார அரசியலை நடத்திக் கொண்டிருக்கும் பாஜகவின் அடியாளாகச் செயல்படுகிறது அமலாக்கத் துறை.

மோடி அரசின் 10 ஆண்டு ஆட்சியில் அரசியல் தலைவர்கள் மீது பதிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை 193 ஆனால், இது வரை 2 வழக்குகளில் மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது CONVICTION RATE வெறும் 1.03 சதவிகிதம்தான். இதனை நாடாளுமன்றத்திலேயே பாஜக ஒத்துக் கொண்டிருக்கிறது. சோதனைகள், கைதுகள் மூலம் தனது அரசியல் எதிரிகளை மிரட்டிப் பழிவாங்கவும் அவர்களது செயல்பாடுகளை முடக்கவும் அமலாக்கத் துறை அரசியல் சதியை நடத்தி கொண்டிருப்பதை தான் CONVICTION RATE வெளிக்காட்டுகிறது.

அமலாக்கத் துறையால் வழக்குகள் பதியப்பட்டவர்



கள், பாஜகவில் இணைந்ததும், அவர்கள் மீதான நடவடிக்கைகள் நின்றுவிடுவது அமலாக்கத்துறையின் அறிவிக்கப்படாத விதியாகும். அமலாக்கத்துறை சோதனை நடத்துவதும் வழக்கு பதிவதும் முழுக்க முழுக்க பாஜகவுக்கு ஆள்பிடிக்க மட்டுமே. எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களைக் குறிவைத்து சோதனை நடத்துவது அதை வைத்து வழக்கு போடுவேன் எனச் சொல்லி மிரட்டி அவர்களை பாஜகவிற்கு ஆதரவாளராக மாற்றுவது என ஒன்றிய பாஜக அரசின் அடியாள் துறையாக அமலாக்கத்துறை செயல்பட்டு வருகிறது. பாஜகவின் இந்த ED பேர அரசியலுக்கு அடிபணியாதவர்களை மட்டும் சிறையில் வைத்து மிரட்டிப் பார்ப்பது என்ற மிக மிகக் கேடுகெட்ட கேவலமான வேலையை ஒன்றிய பாஜக அரசு செய்து வருகிறது.

அமலாக்கத் துறையை வைத்து பூச்சாண்டி காட்டியதால் பாஜகவோடு இணைந்தவர்களைப் பட்டியல் போட்டால், சுவேந்து அதிகாரி, முகுல் ராய், ஷிண்டே, அஜீத் பவார், பிரேம் காந்த் என அவர்கள் நம்பும் அனுமார் வால் போல அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

வடக்கே அமலாக்கத்துறையை வைத்து பாஜகவிற்கு ஆள் பிடித்த பார்முலாவை இங்கே செய்து பார்க்கலாம் எனக் கணக்கு போடுகிறது பாஜக ஆனால் முதுகெலும்பில்லாத கோழைகள் வேண்டுமானால் பாஜகவின் சித்து விளையாட்டிற்குப் பயந்து பாஜகவை ஆதரித்து அடிபணியலாம் ஆனால், ஒருகாலமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடைக்கோடித் தொண்டனையோ, திராவிட மாடல் அரசையோ துரும்பளவு கூட அசைத்துப் பார்க்க முடியாது. பல மாநிலங்களில் மேற்கொண்ட அமலாக்கத்துறையின் மிரட்டல் உத்தியைத் தமிழ்நாட்டையும் திமுகவையும் மிரட்டிப்பார்க்கலாம் என நினைத்து, தமிழ்நாட்டின் டாஸ்மாக் நிறுவனத்தில் முகாந்திரமற்ற வகையில் சோதனை மேற்கொண்டது.

தொகுதி மறுசீரமைப்பிற்கு எதிராக முதலமைச்சர் இப்போது எடுத்திருக்கும் முயற்சி நாடாளுமன்ற மட்டுமல்லாது, நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலிருந்து கிடைத்திருக்கும் ஆதரவு பாஜகவை நிலைகுலையச் செய்திருக்கிறது. தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஒழித்துக்கட்டத் தொகுதி சீரமைப்பின் பெயரால் பாஜக போட்டிருந்த பாசிசத் திட்டத்தை முளையிலேயே முதலமைச்சர் அம்பலப்படுத்திவிட்டார் என்ற ஆத்திரத்திரத்தில் ஆற்றாமையிலும் அமலாக்கத்துறையை ஒன்றிய அரசு ஏவிவிட்டுள்ளது.

நாளை (மார்ச் 22ஆம் தேதி) முதலமைச்சரின் தலைமையில் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு எதிராகப் பல்வேறு மாநில முதல்வர்களும், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய அரசியல் தலைவர்களும் கலந்து கொள்ள இருக்கிற ஆலோசனைக் கூட்டம் பாஜகவின் தூக்கத்தைக் கெடுத்திருக்கிறது. அதனால்தான் அமலாக்கத் துறையை வைத்து மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அமலாக்கத்துறையைப் புனிதமான விசாரணை அமைப்பாகக் காட்டி வந்த பாஜகவின் பிம்பம் தமிழ்நாட்டில்தான் முதல்முறையாகத் துடைத்தெறிய ப்பட்டது. திண்டுக்கல் மருத்துவரிடம் ரூ.20 லட்சம் லஞ்சம் பெற்ற அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி கைதானார்.

கொள்ளையடிப்போர் கூட்டுச் சேர்ந்த காவலனாக அமலாக்கத்துறை பாஜகவோடு கூட்டு வைத்து, பாஜகவின் குற்றங்களுக்குத் துணை போய்க் கொண்டிருப்பது நாட்டிற்கு நல்லதல்ல.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## நெமிலி கிழக்கு ஒன்றியம் – நெமிலி பேரூர் தி.மு.க. சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினர்!

இராணிப்பேட்டை, மார்ச் 22 -

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சட்டமன்றத் தொகுதி நெமிலி கிழக்கு ஒன்றிய தி.மு.கமற்றும் நெமிலி பேரூர் தி.மு.க சார்பில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற

மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா,

நெமிலி கிழக்கு ஒன்றிய செயலாளர் நெமிலி ஒன்றிய குழு தலைவர் பெ. வடிவேலு தலைமையிலும் நெமிலி பேரூர் செயலாளர் ஜி.ஜானர்த்தனன் வரவேற்புரையிலும்

நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கழக அமைப்பு செயலாளர் ஆலந்துர் ஆர்.எஸ். பாரதி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிநலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள்.

இதில்கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி,மாநில சட்டத்துறை இணைச் செயலாளர்

சூர்யா வெற்றி கொண்டான் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

ஜே.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ஏ. கே.சுந்தர மூர்த்தி மு. சிவானந்தம் துரை மஸ்தான் குமுதா குமார் நகர செயலாளர் வி.எல்.ஜோதி ஒன்றிய செயலாளர்கள் ஆர். தமிழ்ச்செல்வன் கே. பசுபதி ஆ. சௌந்தர் பெருமாள் ரவிந்திரன் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானி வடிவேலு பேரூர் செயலாளர்கள் என்.ஆர். சீனிவாசன் எஸ்.நாகராஜன் பேரூராட்சி மன்றத் தலைவர் ரேணுகா தேவி சரவணன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன் அ.அசோகன் மற்றும், நெமிலி கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் ஏ. புருஷோத்தமன் ஏ.முகமது அப்துல் ரகுமான் ஆர். பாண்டியன் பாரதி ஜெயச்சந்திரன் சங்கர் விநாயகம் அரிகிருஷ்ணன் பெருமாள் நெமிலி பேரூர் நிர்வாகிகள் இரா.சேகர் எஸ்.ஹரிஷ் எம்.ரவி எம்.கலங்கி முனுசாமி என்.நிலகண்டன் எஸ்.கார்த்திகேயன் எஸ். சுகுமார் மற்றும் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் மாநில தி.மு.க. அயலக அணி துணைச் செயலாளர் எ.பாபு வினிபிரட் ஏற்பாட்டில் கோடை வெயிலில் பொது மக்களின் தாகத்தை தீர்ப்பதற்காக குளச்சல் அண்ணா சிலை அருகில் அமைக்கப்பட்ட நீர், மோர் பந்தல் திறப்பு விழாவில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர், மோர், தர்பூசணி, பழச்சாறு, வாழைப்பழங்கள் போன்றவற்றை வழங்கினார். நிகழ்ச்சியில் எப்.எம்.இராஜரெத்தினம், என்.நாகூர்கான், அ.நசீர், முகம்மது பஷீர், ஜா.சுஜெய் ஜாக்சன், குளச்சல் நகர்மன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி

# ஏலகிரியில் துணை மின் நிலையம் அமைத்திடுக!

### பேரவையில் க.தேவராஜி வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 22 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது ஜோலார்பேட்டை தொகுதி ஏலகிரியில் துணை மின் நிலையம் அமைத்திட வேண்டும் என்று தொகுதி உறுப்பினர் க.தேவராஜி கோரிக்கை விடுத்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:-

**க. தேவராஜி:** ஜோலார்பேட்டை சட்டப்பேரவை பகுதிகளை உள்ளடக்கிய ஏலகிரியில் ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுகிற பகுதியில் 14 வட்டங்கள் இருக்கின்றன. அந்த 14 வட்டங்களில் இன்றைக்கு



பல்வேறு resortகளை கட்டி, அரசாங்க resortம், தனியார் resortகளும் இருக்கின்றன. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பொழுது போக்கிற்காக resortக்கு வருகிறார்கள். அங்கே கோயில்கள், நம்முடைய சுற்றுப்புறச் சூழல் பொழுதுபோக்கு எல்லாம் இருப்பதால். அங்கே துணை மின் நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு அதற்குரிய இடம் 2 ஏக்கர் அரசு இடம் தொடர்ச்சியாக இருக்கிறது. அதை இந்த ஆண்டிலே, இந்த பட்ஜெட்டிலேயே அமைத்துக் கொடுக்குமாறு அன்போடு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் வி. செந்தில் பாலாஜி:** ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்த வரையில் மொத்தம் திருப்பத்தூர் மாவட்டத்தில் 8 புதிய துணை மின் நிலையங்கள். அவற்றில் ஜோலார்பேட்டையில் 2 புதிய துணை மின் நிலையங்கள். ஒரு துணை மின் நிலையத்திற்கு 1.63 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இன்னொரு துணை மின் நிலையத்திற்கு நிலம் எடுக்கக்கூடிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டி இருக்கின்ற அந்த தேவையை துறைக்கு அனுப்பி ஆய்வு செய்யப்படும் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.